## ஒரு பார்வை - பகுதி 1

**நபி (ஸல்) அவர்கள் மனைவிகளின் அந்தஸ்துகள் கொடுக்கப்பட்டுள்ளது. நபியவர்களின் வளர்ப்பு மகன் ஸைத் (ரலி) அவர்களால் விவாகரத்து செய்யப்பட்ட மனைவியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு, நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கட்டளை இட்டான். முஹம்மது (ஸல்) அவர்கள் இறுதி நபி மற்றும் அவர்களுடன் நபித்துவம் முடிவுக்கு வந்தது. அல்லாஹ்வும், அவனது மலக்குகளும் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலவாத் சொல்வதன்மூலம் நபிகளாரின் அந்தஸ்துகள் கூறப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 18: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 33, அல்அஹ்ஜாப்; வசனம்: 28 - 58; பிரிவு: 4 - 7

1. **நபியே! உங்களுடைய மனைவியரிடம் கூறுவீராக!, "நீங்கள் இவ்வுலக வாழ்க்கை மற்றும் அதிலுள்ள அலங்காரத்தை மட்டுமே விரும்பினால், வாருங்கள்! உங்களுக்கு வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து அழகான முறையில் உங்களை விடுவித்துவிடுகிறேன்". (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 4)**

2. **"ஆனால் அல்லாஹ்வையும், அவனது ரசூலையும், மறுமை நாளையும் நீங்கள் விரும்பினால் நிச்சயமாக உங்களில் நல்லோர்களுக்கு மகத்தான கூலியை அல்லாஹ் தயார் செய்து வைத்துள்ளான்", என்று நீர் கூறுவீராக. (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 4)**

3. **நபி (ஸல்) அவர்களுடைய மனைவிமார்களில் யார் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிபட்டு, நல்ல அமல் செய்கிறாரோ அவர்களுக்கு இரட்டை வெகுமதிகள் வழங்கப்படும். இன்னும் அவர்களுக்கு கண்ணியமான**

வாழ்வாதாரத்தை நாம் தயார் செய்து வைத்துள்ளோம். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 4)

4. அவர்கள் மற்ற பெண்களைப் போல் அல்ல. அவர்கள் இறையச்சத்தோடு இருக்க விரும்பினால், நெருங்கிய உறவினரல்லாத ஆண்களிடம் குழைந்து பேச வேண்டாம். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 4)

5. அவர்கள், தங்களுடைய வீடுகளிலேயே தங்கியிருக்கட்டும். அலங்காரங்களை வெளியில் காட்டிட வேண்டாம். தொழுகையை நிறைவேற்றி, ஜகாஅத் கொடுக்கட்டும். அல்லாஹ்விற்கும் அவனது ரசூலுக்கும் கட்டுப்பட்டு நடக்கட்டும். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 4)

6. நபிகளின் வளர்ப்பு மகனான ஜைத் தம் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டார். அதன் பின் அப்பெண்ணை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்ய வேண்டுமென்பது அல்லாஹ்வின் கட்டளை. (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 5)

*7.* இறைநம்பிக்கையாளர்கள் தங்களது வளர்ப்பு மகனால் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள எந்த நெருக்கடியும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே அல்லாஹ் இவ்வாறு கட்டளையிட்டான். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 5)

*(இதன் பின்னணி: அரபுகளின் வழக்கத்தில் வளர்ப்புப் பிள்ளையை சொந்தப் பிள்ளையாக கருதி அவர்களுடைய சொத்தில் பங்கீடு கொடுத்து வந்தனர். திருமணம், விவாகரத்து, சொத்துரிமை ஆகிய சட்டங்களில் அல்லாஹ்வின் வசனங்களுக்கு, மேற்கூறிய வழக்கம் எதிராக இருந்தது. அவர்களிடம் இருந்துவந்த இப்பழக்கத்தை இஸ்லாமியச் சட்டம் முற்றிலும் மாற்றிவிட்டது. அல்லாஹ் இதனை எடுத்துக்காட்ட நபி (ஸல்) அவர்களை தன் வளர்ப்பு மகன்*

*ஜைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களால் விவாகரத்துச் செய்யப்பட்ட ஜைனப் பின்த் ஜஹ்ஷ் (ரலி) அவர்களை திருமணம் செய்து கொள்ள கட்டளை இட்டான். நபிகளார் இக்கட்டளையை ஏற்று அரபுகளின் பழைய வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்).*

8. **நபியின் மீது அல்லாஹ் விதியாக்கியதை அவர் நிறைவேற்றுவதில் எந்தக் குற்றமும் இல்லை. இதுவே இதற்கு முன் வந்துசென்றவர்கள் விஷயத்தில் அல்லாஹ்வின் நியதியாக இருந்தது. அல்லாஹ்வின் கட்டளை எதுவாயினும் முன்பே தீர்மானிக்கப்பட்ட முடிவாகவே உள்ளது. (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 5)**

9. **முஹம்மத், உங்கள் ஆண்களில் யாருக்கும் தந்தையாக இருக்கவில்லை. (நபியவர்கள் எந்த ஆண் வாரிசையும் விட்டுச் செல்லவில்லை). அவர் அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களின் முத்திரையாகவும் உள்ளார். (நபிமார்களில் அவர் தான் இறுதியானவர். அவருக்கு பிறகு எந்த நபியும் கிடையாது). (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 5)**

10. **நபியே! நிச்சயமாக நாம் உம்மை சாட்சியாளராகவும், சுபச்செய்தி சொல்பவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பியுள்ளோம். இன்னும் அல்லாஹ்வின்பால் மனிதர்களை அழைப்பவராகவும், பிரகாசிக்கும் விளக்காகவும் உம்மை அனுப்பியுள்ளோம். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 6)**

11. **‘அல்லாஹ்விடமிருந்து பெரிய அருட்கொடை, முஃமின்களுக்கு கிடைக்கும்’ என அவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக! (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 6)**

**12.** **நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய மலக்குகளும் நபியின் மீது ஸலவாத் சொல்லுகின்றனர். முஃமின்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லுங்கள்; ஸலாமும் சொல்லுங்கள். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 7)**

**13.** **யார் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் புண்படுத்துகிறார்களோ, அவர்களை இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் சபிக்கின்றான். மேலும், அவர்களுக்கு இழிவுதரும் வேதனையை தயார் செய்து வைத்துள்ளான். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 7)**

14. **யார் ஈமான் கொண்ட ஆண்களையும், ஈமான் கொண்ட பெண்களையும் அவர்கள் செய்யாத ஒன்றைக் கொண்டு புண்படுத்துகிறார்களோ, அவர்கள் மாபெரும் அவதூறையும், வெளிப்படையான பாவத்தையுமே சுமந்து கொள்கிறார்கள். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 7)**

## ஒரு பார்வை - பகுதி 2

பெண்களுக்கு ஹிஜாப் (ஆடை ஒழுங்குமுறை) குறித்த விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இயற்கை வளங்கள் மற்றும் ஜின்கள் போன்றவை தாவூத் (அலை) மற்றும் சுலைமான் (அலை) அவர்களுக்கு கட்டுப்படும்படி அல்லாஹ் அவர்களுக்கு அருளியிருந்தான் என்பதை ஸூரா ஸபா எடுத்துரைக்கிறது. அல்லாஹ் அவர்களை நன்றியுள்ளவர்களாக இருக்க நினைவூட்டுகிறது. ஸபா நாட்டு மக்களுக்கு அல்லாஹ் செழுமையை வழங்கியிருந்தான். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றியற்றவர்களாக இருந்தனர். இது அவர்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்து, மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

## தராவிஹ் - 18: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 33, அல்அஹ்ஜாப்; வசனம்: 59 - 73; பிரிவு: 8 - 9

1. நபியே உங்களுடைய மனைவியருக்கும், பெண் பிள்ளைகளுக்கும், மு.:மினான பெண்களுக்கும் கூறுவீராக! அவர்கள் தங்களுடைய ஆடைகளை சரிசெய்து, தலை முந்தானைகளை இறக்கி தொங்கவிட்டுக் கொள்ளட்டும். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 8)

2. இதுதான் கண்ணியமானதும், அவர்கள் முஸ்லீம்கள் என்று அறியப்படுவதற்கும், அவர்கள் தொல்லை செய்யப்படாமல் இருப்பதற்கும் ஏற்றதாகும். அல்லாஹ் மன்னிப்பவனாகவும், இரக்கமுடையவனாகவும் இருக்கின்றான். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 8)

3. மு.:மின்களே! அல்லாஹ்வை அஞ்சி நடப்பீர்களாக! மேலும் நேர்மையான சொல்லைப் பேசுவீராக! அவன் உங்களுடைய காரியங்களை சீராக்கி வைப்பான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். யார் அல்லாஹ்விற்கும் அவனது ரசூலுக்கும்

கட்டுப்படுவாரோ அவர், நிச்சயமாக மிகப்பெரும் வெற்றியை அடைந்து விட்டார். (ஸூரா - அல்அஹ்ஜாப்; பிரிவு: 9)

## ஸூரா - 34, ஸபஉ; வசனம்: 1 - 14; பிரிவு: 1 - 2

4. வானங்களிலோ அல்லது பூமியிலோ அணுஅளவு அல்லது அதைவிடக் குறைவாக எதுவும் அல்லாஹ்விடமிருந்து மறைந்தவை அல்ல. அனைத்தும் தெளிவான புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 1)

5. அல்லாஹ், தாவூத் (அலை) அவர்களுக்கு அருட்கொடைகளை வழங்கினான். மலைகளுக்கும், பறவைகளுக்கும் அவரோடு சேர்ந்து அல்லாஹ்வை துதிபாடுமாறு அல்லாஹ் அறிவித்தான். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

6. போர் கவசங்களை அவர் கையாலேயே தயார் செய்கின்ற அளவுக்கு இரும்பை அல்லாஹ் தாவூது (அலை) அவர்களுக்கு இலகுவாக்கினான். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

7. அல்லாஹ், சுலைமான் (அலை) அவர்களுக்கு காற்றை வசப்படுத்திக் கொடுத்தான். அதன்மூலம் காலைப் பயணம் ஒரு மாத தொலை தூரமும், மாலைப் பயணம் ஒரு மாத தொலை தூரமும் இருக்கின்ற விதத்தில் காற்றைத் தயார் செய்தார்கள். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

8. அல்லாஹ் அவருக்கு செம்பின் ஊற்றை தண்ணீரைப் போல ஓடச் செய்தான். மேலும் ஜின்களையும் கட்டுப்படச் செய்தான். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

9. சுலைமான் (அலை) அவர்களுக்காக அந்த ஜின்கள் உயரமான மாளிகை போன்று வழிபாட்டுத்தலங்களையும்,

சிற்பங்களையும், பெரும் நீர்த் தேக்கங்களைப் போன்ற கொப்பரைகளையும், உறுதிவாய்ந்த உணவுப் பாத்திரங்களையும் செய்து கொடுத்தன. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

10. மேலும் அவரிடம் அல்லாஹ், "தாவூதின் சந்ததியினரே! நன்றி செய்யுங்கள். மேலும் என் அடியார்களில் நன்றி செலுத்துவோர் சொற்பமானவர்களே!" என்று கூறினான். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

11. அல்லாஹ் சுலைமான் (அலை) அவர்களை மரணிக்கச் செய்தபோது, அவர் தன் கைத்தடியில் சாய்ந்திருந்தார். கைத்தடியை கரையான்கள் அரித்து அவர் கீழே விழுகின்றவரை அவர் இறந்த செய்தி ஜின்களுக்கு தெரியவில்லை. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

12. அப்போதுதான் ஜின்கள் தாம் மறைவானவற்றை அறிபவர்களாக இருந்திருப்பின் இழிவுதரும் இந்த வேதனையில் இதுவரை இருந்திருக்கமாட்டோமே! என்பதை விளங்கிக் கொண்டன. (அல்லாஹ் மட்டுமே மறைவானவற்றை அறிந்தவன் என்பதை, மக்களுக்கும், ஜின்களுக்கும் இது தெளிவாகக் காட்டுகிறது). (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

13. ஸபா நாட்டு மக்களுக்கு அவர்கள் வசித்துவந்த இடங்களில் ஓர் அத்தாட்சி இருந்தது. அவர்களுக்கு வலது புறம் மற்றும் இடது புறம் என இரு தோட்டங்களிருந்தன. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

14. "உங்களுக்கு அல்லாஹ் வழங்கிய வாழ்வாதாரத்திலிருந்து உண்ணுங்கள். மேலும் அவனுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனென்றால் அது தூய்மையுள்ள வளமான நகரம்.

இறைவனும் மிகவும் மன்னிப்பவன்" என்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

15. ஆனால் அவர்கள் அதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் புறக்கணித்தனர். ஆகவே அல்லாஹ் அணையின் பெருவெள்ளத்தை அந்த இரு தோட்டங்களையும் கசப்பும், புளிப்பும் நிறைந்த பழங்கள் தரக் கூடியதாகவும், சில எலந்தை மரங்களுள்ள தோட்டமாகவும் மாற்றினான். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

16. இது அவர்கள் நம்மை ஏற்க மறுத்த காரணத்தால் அவர்களுக்கு நாம் வழங்கிய தண்டனையாகும். நம்மை மறுப்பவரைத் தவிர மற்றவருக்கு நாம் தண்டனை வழங்குவோமா என்ன? (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

17. இவர்களுக்கு அருகிலே அல்லாஹ்வின் பரக்கத்தைப் பெற்ற சில ஊர்கள் (சிரியா, பாலஸ்தீன்) இருந்தன. அவர்கள் அங்கே இரவும், பகலும் முழு பாதுகாப்புடன் பயணிக்கலாம். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

18. எனினும் அவர்கள் அல்லாஹ்விடம், “இறைவா! எங்களுடைய பயணங்களுக்கு இடையே நீண்ட தூரத்தை ஏற்படுத்துவாயாக!" என கூறி அவர்கள் தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டனர். ஆகவே அவர்களை பழங்கதைகளாக ஆக்கி விட்டோம். இன்னும் அவர்களைப் பல இடங்களில் சிதற வைத்தோம். நிச்சயமாக இதில் பொறுமையாளர் மற்றும் நன்றி செலுத்துவோர் ஒவ்வொருவருக்கும் அத்தாட்சிகள் இருக்கின்றன. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 3

**காஃபிர்கள் அல்லாஹ்வை மறுத்ததற்காக மறுமையில் வருந்துவார்கள். நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும். வெற்றி என்பது உங்கள் செல்வத்திலும், அந்தஸ்திலும் இல்லை. ஆனால் அது அல்லாஹ்வை வணங்குவதிலும், நல்ல செயல்களைச் செய்வதிலும் இருக்கிறது.**

## தராவிஹ் - 18: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 34, ஸபஉ; வசனம்: 15 - 54; பிரிவு: 3 - 6

1. **நபியே! உம்மை நாம் உலக மக்கள் அனைவருக்கும் நற்செய்தி சொல்வதற்காகவும், முன்னெச்சரிக்கை செய்வதற்காகவும் தூதராக அனுப்பிவைத்தோம். ஆனால், மனிதர்களில் பெரும்பாலோர் இதை அறிந்துகொள்வதில்லை. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 3)**

2. **“இந்தக் குர்ஆனையும், இதற்கு முன்னுள்ள வேதங்களையும் நிச்சயமாக நாங்கள் நம்பமாட்டோம்” என்று காஃபிரானவர்கள் கூறுகிறார்கள். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 4)**

3. **மறுமையில் இந்த அநியாயக்காரார்கள் தங்கள் இறைவனிடம் நிறுத்தப்படும்போது, ஒருவர் மற்றொருவரை குற்றம் சுமத்துதை நீர் காண்பீர். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 4)**

4. **அவர்கள் அல்லாஹ்வின் வேதனையைப் பார்க்கும் போது துக்கத்தை மனதிற்குள் மறைத்துக்கொள்வார்கள். அல்லாஹ் காஃபிர்களின் கழுத்தில் சங்கிலியை மாட்டுவான். அவர்கள் செய்த வினைக்காக இல்லாமல் வேறு எதற்காகவுமா அவர்களுக்குப் பிரதிபலன் வழங்கப்படும்?“ (ஸூரா - ஸபஉ; பிரிவு: 4)**

5. எந்த ஊருக்கு அல்லாஹ் எச்சரிக்கும் தூதரை அனுப்புகிறானோ, அதிலுள்ள வசதி படைத்த மக்கள், “அனுப்பப்பட்டுள்ள தூதை நாங்கள் மறுக்கிறோம். மேலும் நங்கள் பொருளாதாரத்திலும் மக்கட் செல்வத்திலும் செழிப்பானவர்கள், (எங்களுடைய கடவுளர்களோடு சந்தோஷமாகவும் இருக்கின்றோம்). ஆகவே நாங்கள் தண்டிக்கப்பட மாட்டோம்” என்று கூறுவர். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 4)

6. நபியே! நிச்சயமாக என் இறைவன் தான் நாடியவர்களுக்கு செல்வத்தைத் தாராளமாக வழங்குகின்றான். தான் நாடியவர்களுக்கு அளவோடு வழங்குகின்றான். எனினும் மனிதரில் பெரும்பாலோர் இதை அறியவில்லை. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 4)

7. உங்களுடைய பொருட்செல்வங்களும், மக்கட் செல்வங்களும் அல்லாஹ்விடத்தில் உங்களுக்கு நெருக்கத்தைப் பெற்றுத்தராது; ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்பவர்களைத் தவிர. அத்தகையோர்க்கு, அவர்கள் நற்செயல் புரிந்த காரணத்தால் இரட்டிப்பு நற்கூலி கிடைக்கும். மேலும் அவர்கள் சொர்க்க மாளிகைகளில், நிம்மதியாக இருப்பார்கள். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 5)

8. யார் நம்முடைய வசனங்களிலே தோல்விக்கான வீண் முயற்சி செய்கிறார்களோ, அவர்களே வேதனையில் கொண்டுவந்து நிறுத்தப்படுவார்கள். அநீதி இழைதோர்களிடம், “நீங்கள் எதைப் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தீர்களோ, அந்நரக நெருப்பின் வேதனையை இப்போது சுவைத்துப் பாருங்கள்" என்று கூறப்படும். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 5)

9. மறுமை நாளில் இந்த காஃபிர்கள் பயத்தால் நடுங்குவார்கள். அவர்களுக்குத் தப்பியோட வழியுமிராது. (ஸூரா - ஸபஉ; பிரிவு: 6)

10. இன்னும் சமீபமான இடத்திலிருந்தே அவர்கள் பிடிபடுவார்கள். அப்போது அவர்கள், "நபியவர்கள் கொண்டு வந்த சத்திய மார்க்கத்தை ஏற்கின்றோம்", என்பர். ஆனால் எட்டாத இடத்திலிருந்து (ஒன்றை) எவ்வாறு அவர்களால் எட்டிப்பிடிக்க முடியும்? (ஸூரா - ஸபஉ; பிரிவு: 6)

11. அவர்களுக்கும், அவர்கள் ஆசைப்பட்டதற்கும் குறுக்கே திரையிடப்பட்டது. முன்பு இவர்களைப் போன்றவர்களுக்கும் அவ்வாறே செய்யப்பட்டது. நிச்சயமாக அவர்களும் பலமான சந்தேகத்தில் இருந்தனர். (ஸூரா - ஸபஉ; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 4

வானங்களையும், பூமியையும் தோற்றுவித்த அல்லாஹ்வின் புகழுடன் ஸூரா ஃபாதிர் தொடங்குகிறது. ஷைத்தான் உங்களின் பரம எதிரி; அவன் உங்களை அழிவுக்கு இட்டுச் செல்வான் என்று எச்சரிக்கிறது. ஈமான்கொண்டவர்கள் சொர்க்கத்தில் நுழையும் போது அவர்களின் ஆடையும், பேச்சும் எவ்வாறு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பேச்சு, காஃபிர்கள் நரக நெருப்பில் நுழைந்தபின் அவர்கள் பேசும் பேச்சிலிருந்து வேறுபட்டு இருக்கும்.

## தராவிஹ் - 18: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 35, ஃபாதிர்; வசனம்: 1 - 45; பிரிவு: 1 - 5

1. அல்ஹம்துலில்லாஹ்! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவனே வானங்களையும், பூமியையும் படைத்தவன். அவன், வானவர்களை இரண்டிரண்டு, மும்மூன்று, நன்நான்கு இறக்கைகள் கொண்ட தூதர்களாக ஆக்கியவன். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 1)

2. அல்லாஹ் மக்களுக்கு வழங்குகின்ற அருட்கொடைகளை யாராலும் தடுக்க முடியாது. அவன் தடுத்திருந்தால் அதனை வழங்குபவர் யாரும் கிடையாது. (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 1)

3. மனிதர்களே! அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள பாக்கியங்களைச் சிந்தித்துப் பாருங்கள். வானத்திலிருந்தும், பூமியிலுமிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன் அல்லாஹ்வை அன்றி வேறு படைப்பாளன் இருக்கின்றானா? அவனை தவிர வேறு இறைவன் இல்லை. பின்னர் எவ்வாறு நீங்கள் திசை திருப்பப்படுகிறீர்கள்? (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 1)

4. நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதியாவான். நரகவாசிகளாக ஆக்குவதற்குதான் அவன் தன் கூட்டாளிகளை அழைக்கிறான். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 1)

5. யார் கண்ணியத்தை விரும்புகிறாரோ, (அவர் தெரிந்து கொள்ளட்டும்) கண்ணியம் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். நற்சொற்கள் எல்லாம் அவன் பக்கமே மேலேறிச் செல்கின்றன. நற்செயல்கள் எல்லாம் அவற்றை உயர்த்துகின்றன. (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 2)

6. அல்லாஹ்தான் உங்களின் இறைவன். அவனுக்கே முழு ஆட்சி அதிகாரமும் உண்டு. அவனையன்றி யாரை நீங்கள் வணங்குகின்றீர்களோ, அவர்கள், இழை அளவுகூட எதையும் உடமையாக்கிக் கொள்ளமாட்டார்கள். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 2)

7. மனிதர்களே! நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடம் தேவை உடையவர்கள். ஆனால் அல்லாஹ்தான் தேவையற்றவன். புகழுக்குரியவன். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 3)

8. அல்லாஹ் நினைத்தால் உங்களை அழித்து விட்டு, உங்களுடைய இடத்தில் வேறொரு படைப்பினை உருவாக்கி விடுவான். நிச்சயமாக அது அல்லாஹ்விற்கு சிரமமானது கிடையாது. (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 3)

9. அல்லாஹ்வின் அனுமதி கொண்டு நன்மைகளை நோக்கி முந்திக் கொண்டவர்களும் உண்டு. அவர்கள் சுவர்க்கம் செல்வார்கள். சுவர்க்கவாசிகள் அங்கே நுழையும்போது, தங்க ஆபரணங்கள் மற்றும் முத்துக்களால் அலங்கரிக்கப்படுவார்கள். அவர்களுடைய ஆடை, பட்டினால் தயாரிக்கப்பட்டதாக இருக்கும். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 4)

10. “எங்களை விட்டும் கவலையை நீக்கிய அல்லாஹ்விற்கே புகழனைத்தும்! நிச்சயமாக எங்களுடைய இறைவன் மன்னிப்பவனாகவும், நன்றி பாராட்டுகிறவனாகவும் இருக்கின்றான். மேலும் அவன் தன்னுடைய அருளினால் நிரந்தரமாக இருக்கின்ற வீட்டிலே எங்களை தங்க வைத்தான். அதிலே எவ்வித சிரமமும், கவலையும் எங்களைத் தீண்டாது” என்று சுவர்க்கவாசிகள் கூறுவர். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 4)

11. காஃபிர்களுக்கு தண்டனையாக நரக நெருப்பு உண்டு. அவர்கள், “எங்கள் இறைவா! நீ எங்களை இதை விட்டு வெளியேற்றுவாயாக! நாங்கள் வழக்கமாகச் செய்து கொண்டிருந்த தீயவற்றை விட்டும் ஸாலிஹான நற்செயல்கள் செய்வோம்” என்று கூறிக் கதறுவார்கள். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 4)

12. அதற்கு "அல்லாஹ்வின் எச்சரிக்கைகளை எடுத்துக் கொள்ளும் அளவுக்கு நீண்ட ஆயுள் உங்களுக்கு வழங்கப்படவில்லையா?" என்று கேட்கப்படும். "உங்களிடம் அச்சமூட்டி எச்சரிப்பவரும் வந்திருந்தார். ஆகவே நீங்கள் செய்த அநியாயத்தின் பயனைச் சுவையுங்கள். அநியாயக்காரர்களுக்கு உதவியாளர் எவருமில்லை” என்று கூறப்படும். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 4)

13. மக்கள் செய்கின்ற தவறுக்கு அல்லாஹ் தண்டனை வழங்க நினைத்தால் பூமியில் எந்த படைப்பும் மிச்சமிருக்காது. ஆனால் குறிப்பிட்ட தவணை வரையில் அல்லாஹ் தண்டனையை தாமதப் படுத்துகின்றான். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 5)

14. அந்தக் குறிப்பிட்ட நேரம் வரும் போது, அல்லாஹ் தனது அடியார்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான்

**என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். (ஸூரா - ஃபாதிர்; பிரிவு: 5)**

## ஒரு பார்வை - பகுதி 5

**குர்ஆன் மக்களை எச்சரிக்கவும், கா∴பிர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை சமர்ப்பிக்கவும் அல்லாஹ்வால் அருளப்பட்டது என்று ஸூரா யாசீன் தொடங்குகிறது. அல்லாஹ் ஒரு ஊருக்கு மூன்று நபிமார்களை அனுப்பிய சம்பவம், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதையும், அவனது தூதர்களை நிராகரித்ததன் விளைவையும் வலியுறுத்துகிறது.**

## தராவிஹ் - 18: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 36, யாஸீன்; வசனம்: 1 - 32; பிரிவு: 1 - 2

1. **யாஸீன்! ஞானம் நிரம்பிய குர்ஆன் மீது சத்தியமாக! நபியே! நிச்சயமாக நீர் நம் தூதர்களில் ஒருவர்தான். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 1)**

2. **இது வல்லமை மிக்கவனும், மிகுந்த கருணையாளனுமான அல்லாஹ்வினால் இறக்கப்பட்டது. இந்த சமூகத்தாரை (மக்கத்து மக்களை) நீர் எச்சரிக்கை செய்யவேண்டும் என்பதற்காக இது அருளப்பட்டது. அவர்களின் மூதாதையர் அவ்வாறு எச்சரிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் அலட்சியமாக உள்ளனர். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 1)**

3. **அல்லாஹ்வினுடைய வசனங்களைப் புறக்கணித்தவர்களுக்கு அவர்களுடைய கழுத்திலே சங்கிலிகள் பூட்டப்படும். அவை அவர்களின் தாடைகள் வரை உள்ளன. மேலும் அவர்கள் எதையும் பார்க்க முடியாத வகையில் அவர்களுக்கு முன்னாலும், பின்னாலும் தடைகள் ஏற்படுத்தப்படும். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 1)**

4. நபியே! அவர்களை நீர் எச்சரிப்பதும், எச்சரிக்காமலிருப்பதும் அவர்களுக்கு ஒன்றுதான். அவர்கள் இறைநம்பிக்கை கொள்ளப்போவதில்லை. (ஸூரா - யாஸீன்; பிரிவு: 1)

5. நபியே! யார் இந்த அறிவுரையைப் பின்பற்றி மறைவிலும் அளவிலா அருளாளன் இறைவனை அஞ்சுகின்றாரோ, அவரைத்தான் நீர் எச்சரிக்கை செய்வீர். எனவே, அவருக்கு மன்னிப்பும், கண்ணியமான நற்கூலியும் உண்டென்று நற்செய்தி கூறுவீராக! (ஸூரா - யாஸீன்; பிரிவு: 1)

6. ஓர் ஊர் மக்களை எடுத்துக்காட்டாக அல்லாஹ் இங்கு குறிப்பிடுகிறான். அந்த ஊருக்கு இரண்டு இறைத்தூதர்களை அவன் அனுப்பினான். ஆனால், அவ்விருவரையும் அவர்கள் பொய்யாக்கினார்கள். ஆகவே மூன்றாவது தூதரை அனுப்பி அவ்விரு தூதர்களையும் வலுப்படுத்தினான். அந்த தூதர்கள், "அல்லாஹ்வின் செய்தியை உங்களுக்கு தெளிவாக எடுத்துரைப்பதற்கு வந்தோம்" என கூறினார்கள். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 2)

7. அதற்கு அவர்கள் இறைத்தூதர்களைப் பார்த்து, "நிச்சயமாக நாங்கள் உங்களைத் கெட்ட சகுனமாக கருதுகின்றோம். நீங்கள் இதிலிருந்து விலகிக் கொள்ளாவிட்டால் உங்களை கல்லால் அடிப்போம். மேலும் எங்களிடமிருந்து உங்களுக்கு நோவினை செய்யும் வேதனையும் வந்தடையும்” என்றனர். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 2)

8. ஊரின் எல்லையிலிருந்து விரைந்து வந்த ஒரு விசுவாசி அந்த ஊர் மக்களிடம், “எந்தக் கூலியையும் உங்களிடம் கேட்காத, நேர்வழி காட்டக்கூடிய இந்த ரசூல்மார்களை பின்பற்றுங்கள்” எனக் கூறினார். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 2)

9. ஊரின் எல்லையிலிருந்து விரைந்து வந்தவர் மேலும் கூறினார்: "முன்மாதிரியின்றி என்னைப்படைத்த இறைவனை நான் வழிபடாதிருக்க எந்த நியாயமும் இல்லை. அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். அவனையன்றி வேறு யாரையும் நான் தெய்வங்களாக ஆக்கிக்கொள்வேனா?" (ஸூரா - யாஸீன்; பிரிவு: 2)

10. அந்த ஊர் மக்கள் அவரைக் (கல்லால் அடித்து, மிதித்து) கொன்று விட்டனர். மேலும் "சுவர்க்கத்தில் நுழைவீராக!" என்று அவருக்கு சொல்லப்பட்டது. (ஸூரா - யாஸீன்; பிரிவு: 2)

11. நாம் அவருக்குப் பின்னால், அவருடைய சமூகத்தார் மீது வானத்திலிருந்து எந்த படையையும் (அவர்களை அழிப்பதற்காக) இறக்கிவைக்கவில்லை. பின்னர், ஒரே ஒரு மிகப் பெரும் சப்தம் தான். அதில் அனைத்து மக்களும் அழிந்து போயினர். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 2)

---------------------------------------------------------------